**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை – திருமதி பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.**

திருவள்ளுராண்டு 2055, குரோதி வருடம், பங்குனி மாதம் 04–ம் நாள்
2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18–ஆம் நாள் புதன்கிழமை

**CNR. No.TNMY03-000269-2025**

**அசல் வழக்கு எண்.45/2025**

கனரா பேங்க், மயிலாடுதுறை,
அதன் முதன்மை மேலாளர் மூலமாக ... வாதி

/எதிர்/

1. S.சாந்தகுமார்,
2. S.பூமணி. ... பிரதிவாதிகள்.

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு வாதிக்காக வழக்கறிஞர் திரு கே. அழகானந்தன், அவர்கள் ஆஜராகியும், 1ஆம் பிரதிவாதியிடம் அழைப்பானை சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் அழைக்கும் போது ஆஜராகாததால் தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டும், 2ஆம் பிரதிவாதி இறந்துவிட்டார். அவரை நீக்கரவு செய்யப்பட்டார். வாதி தரப்பு சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்தபோது, வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டு, இதுநாள் வரையில் எனது பரிசீலனையில் வைத்து, இன்றைய தினம் இந்நீதிமன்றம் கீழக்கண்டவாறு வழங்கும்.

**தீரப்புரை**

வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் தாவா தொகை ரூ.4,59,561/–யும், அதற்குரிய பின் வட்டியையும், செலவுத் தொகையும் கொடுக்க உத்தரவிட கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வாதி வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:–**

1ஆம் பிரதிவாதி வாதி வங்கியில் கடந்த 16.10.2014 அன்று ரூ.2,01,600/–ம் கல்வி கடனாக பெற்றுள்ளார். 2ஆம் பிரதிவாதி, 1ஆம் பிரதிவாதியின் தாயார் ஆவார். 1ம் பிரதிவாதி மேற்படி கடன் தொகையை 11.70% வட்டியுடன் திருப்பி செலுத்துவதாக உறுதி கூறி கடன் விண்ணப்பம், கல்வி கடன் ஒப்பந்தம், 27.04.2017 தேதியிட்ட 1ஆம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த கடன் உயிர்ப்பு கடிதம் எழுதிக் கொடுத்துள்ளார். மேலும், 2ஆம் பிரதிவாதி மேற்படி கடனுக்கு பொறுப்புறுதியாளர் ஆவார்.

வாதி பலமுறை கடன் தொகையை திரும்ப செலுத்த கேட்டும் 1ஆம்

பிரதிவாதி செலுத்த முன்வரவில்லை. கடந்த 16.01.2025 முடிய 1ம் பிரதிவாதி பெற்ற கடனுக்கு கணக்கு பட்டியலின்படி மொத்தம் ரூ.4,59,561/– செலுத்த வேண்டியுள்ளது. ஆகையால் தாவா தொகையும், அதற்கு பின் வட்டியையும், செலவுத்தொகையையும் பிராதுபடி வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் வழங்கிட உத்தரவு பிறப்பிக்க வேண்டி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

இவ்வழக்கு 1ம் பிரதிவாதி அழைப்பாணையை பெற்றுக் கொண்டு நீதிமன்றத்தில் அழைக்கும் போது ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளார். 2ம் பிரதிவாதி இறந்துவிட்டார். அவரை நீக்கரவு செய்யப்பட்டார். வாதி தரப்பில் வாதி வங்கியின் முதுநிலை மேலாளர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய பிரச்சனைகள்:–</u>**

வாதி தாக்கல் செய்த தாவா செலவுத்தொகையுடன் அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு:–</u>**

வாதி வங்கியின் கிளையின் முதுநிலை மேலாளர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வாதி வங்கியின் கிளை முதுநிலை மேலாளருக்கு சாட்சியம் அளிக்க 17.07.2024 அன்று கொடுக்கப்பட்ட Authorization letter வா.சா,ஆ.1 ஆகவும், 08.09.2014 தேதியிட்ட வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.2 ஆகவும், 16.10.2014 தேதியிட்டு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Educational Loan Agreement வா.சா.ஆ.3 ஆகவும், 10.09.2021 தேதியிட்டு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Acknowledgement Debt and Security அசல் வா.சா.ஆ.4 ஆகவும், 18.12.2022 தேதியிட்டு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Acknowledgement Debt and Security அசல் வா.சா.ஆ.5 ஆகவும், 13.02.2025 தேதியிட்ட வாதி வங்கியில் தாக்கல் செய்த கணக்கு பேரேட்டு நகல் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

வாதி வங்கியின் கிளை மேலாளரான வா.சா.1 தாவா சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வாதி தரப்பு சான்றாவணங்களின் அடிப்படையில் வாதி வங்கியில் 1ஆம் பிரதிவாதி ரூ.2,01,600/– கல்விக்கடன் பெற்றுக்கொண்டு அதற்கு கடன் விண்ணப்பம், கல்வி கடன் ஒப்பந்தம், கடன் உயிர்ப்பு கடிதம் ஆகியவை எழுதிக் கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. எனவே, வாதி வங்கி கணக்குப்பட்டியல் வா.சா.ஆ.6–ல் இருந்து 1ஆம் பிரதிவாதி வாங்கிய கடனின் அடிப்படையில் தாவா தொகை வாதி வங்கிக்கு சேர வேண்டியுள்ளது என்பது தெரியவருவதால் 1ஆம் பிரதிவாதி தாவா கடனின் படி தாவா தொகையை செலுத்த

கடமைப்பட்டுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

இந்நிலையில் 1ஆம் பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைக்கும் போது ஆஜராகாததால் தோன்ற தரப்பரனராக இருப்பதால் மறுதரப்பில்லா வாதியின் வழக்கு அவர் முன்னிலைப்படுத்திய வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் படி நிரூபிக்கப்பட்டுள்ளதால் வாதியின் வழக்கு கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், வாதி தாவாவில் கோரும், பரிகாரங்கள் பெற தகுதியானவர் என்று இப்பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக,**

வாதி தாக்கல் செய்த தாவா செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு பிரதிவாதி வாதி வங்கிக்கு தாவா தொகையான ரூ.4,59,561/- மற்றும் அந்த கடனின் அசல் தொகையான ரூ.ரூ.2,01,600/-த்திற்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதிவரை 9 சதவீதம் வட்டியும், தீர்ப்புத்தேதியிலிருந்து தொகை செலுத்தும் வரை 6 சதவீத வட்டியும் சேர்த்து கணக்கிட்டு கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்தீர்ப்புரையானது என்னால் தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் படித்து சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று (18.03.2026) அவையறிய பகரப்பட்டது.

SUDHA P Digitally signed by SUDHA P
Date: 2026.03.18 18:16:50 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**
**மயிலாடுதுறை.**

**<u>பின் இணைப்பு:-</u>**

<u>வாதி தரப்பு சாட்சி</u>

வா.சா. 1 மதுசூதனராவ் (முதுநிலை கிளை மேலாளர்)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | ஷரா |
|---|---|---|---|
| வா.சா.ஆ. 1 | 17.07.2024 | வாதி வங்கி அதிகாரிகளால் கொடுக்கப்பட்ட Authorization letter | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ. 2 | 08.09.2014 | கடன் விண்ணப்பம் | அசல் |
| வா.சா.ஆ. 3 | 16.10.2014 | 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Educational Loan Agreement | அசல் |
| வா.சா.ஆ. 4 | 10.09.2021 | 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Acknowledgement of Debt and Security | அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ. 5 | 18.12.2022 | பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Acknowledgement Debt and Security | அசல் |
| வா.சா.ஆ. 6 | 13.02.2025 | வங்கி கணக்கு பட்டியல் | சான்றிட்ட நகல் |

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.18 18:16:57 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**
**மயிலாடுதுறை.**

*முதன்மை சார்பு நீதிமன்றம்,*
*மயிலாடுதுறை.*
*நேரிய/வரைவு தீர்ப்பு*
*O.S. 45/2025*
*நாள். 18.03.2026*